DEPOSITION OF THE WITNESS

IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RAMESWARAM

**Case no: CC.No.171/2022**

**prosecution witness: Pw**

| | | | |
|---|---|---|---|
| Name | : | Caste | : |
| Fathers Name | : | calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**Accused absent 317 petition filed**

வாக்குமூலம்

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்

வழக்கு எண்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : மிக்கேல் | ஜாதி | : |
| த/பெ. | : | தொழில் | : |
| கிராமம் | : | சமயம் | : |
| தாலுகா | : | வயது | : |

**14.07.2023**

முதல் விசாரணை:-

1. நான் தங்கச்சிமடத்தில் வசித்து வருகிறேன். கடல் தொழில் செய்து வருகிறேன். எதிரி சரவணனை தெரியாது. கடந்த 17.10.2021-ம் தேதி மாலை 3 மணியளவில் செம்மமடம் ரோட்டின் அருகே போலீசார் வாகன சோதனையில் இருந்த போது ஒரு வண்டியை சோதனை செய்த போது அதில் நகை இருந்தது. அதன்பிறகு போலீசார் நகர் காவல் நிலையத்தில் கையொப்பம் போடும் படி என்னையும், ராஜ் என்பவரையும் அழைத்தார்கள். நாங்கள் இருவரும் சென்று கையொப்பம் செய்தோம். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசுத் தரப்பு வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அனுமதி அளிக்கப்பட்டது.)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை:

1. போலீசார் விசாரணையில் கடந்த 17.10.2021-ம் தேதி பகல் 12 மணிக்கு நானும், எனது நண்பர் ராஜ் என்பவரும் பொந்தம்புளி மெயின் ரோட்டில் நின்றுகொண்டிருந்த போது இராமேஸ்வரம் நகர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தார் என்றும் அப்போது எதிரி சரவணன் ஓட்டி வந்த hero splender மோட்டார் வாகனத்தை சோதனை செய்த போது அவரது

பவுச்சில் நகைகள் இருந்ததை விசாரித்த போது அவர் தாமாக முன்வந்து ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரியல்ல.

2. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை சார்பு ஆய்வாளர் என் முன்னிலையிலும், ராஜ் என்பவர் முன்னிலையிலும் பதிவு செய்து அதில் நானும், ராஜ் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றால் சரியல்ல. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் நகர் காவல் நிலைய சார்பு ஆய்வாள்ர தயார் செய்த அத்தாட்சியிலும் நானும், ராஜ் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்றால் சரியல்ல. பின்னர் எதிரி சரவணன் அவர் வீட்டிற்கு அழைத்து சென்று எடுத்து ஆஜர் செய்த dell laptop ஐ எங்கள் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து சார்பு ஆய்வாளர் கைப்பற்றினார் என்றால் சரியல்ல. அந்த அத்தாட்சியில் நானும், ராஜ் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்று போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.